**11.07.2019**

## பத்திரிக்கை செய்தி

**அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 4, 824 மாணவ மாணவியர்கள் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலைப் பற்றியும் அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கி மலை, வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி-டி.எம். எஸ் வழியாக விமான நிலையம் வரை மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர்.

கல்விப் பயணங்கள் மாதம்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2018-19 ஆம் கல்வி ஆண்டில் மொத்தம் 31, 178 மாணவ மாணவியர்கள் மெட்ரோ இரயிலில் பயணித்து பயன் பெற்றனர்.

2019-20 ஆம் ஆண்டிற்கான கல்விப் பயணம் 2019 ஜூன் 4 முதல் தொடங்கியது. 2019 ஜூன் மாதத்தில் மொத்தம் 4,284 மாணவர்கள் இந்த கல்விப் பயணத்தை மேற்கொண்டனர்.